# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

## O.S.No. 291 of 2018

| | | |
|---|---|---|
| பெயர் | : | சாந்தவதி |
| கணவர் பெயர் | : | காசிநாதன் |
| வா.த.சா | : | 1 |

1969ம் ஆண்டு 14வது சட்டத்தின் படி 12வது பிரிவின் கீழ் 13.06.2025 அன்று **திரு. M. ராஜகுமரேசமன், B.Com., L.L.B.,** முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, கடலூர் அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

வா.த.சா. 1 அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் 1 முதல் 3 தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**பிரதிவாதிகள் 1 முதல் 3 தரப்பில் குறுக்கு விசாரணை.**

இந்த வழக்கை நான் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னை பிரதிவாதிகள் அம்பிகா மற்றும் அவரது அடியாட்கள் அடித்து துன்புறுத்தினார்கள் மேலும் கடலூர் துறைமுகம், காசுக்கடை தெருவில் உள்ள வீடு எனக்கு வேண்டும் என்று இந்த வழ்க்கை நான் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வழக்கு சொத்து எனது தாயார் பெயரில் உள்ளது. இன்றளவும் எனது தாயார் பெயரில்தான் உள்ளது.

2. மேற்படி வீடு எனது தாயார் காலத்தில் நான்கு பாகங்களாக எனது தாயாருக்கு ஒரு பாகம் எனவும், எனது அண்ணன், தம்பி மற்றும் எனக்கு தலா ஒரு பாகமும் பிரித்துக்கொடுக்கப்பட்டது. அதற்கான ஆவணங்கள் அணைத்தையும் எனது அண்ணன் மனைவி வகையறா எடுத்து சென்றுவிட்டார்கள். நான் சொல்லும் பாகப்பிரிவினை எதையும் பத்திரப் பதிவு அலுவலகத்தில் சென்று பதிவு செய்யவில்லை.

3. மேற்படி சொத்து எனது தாயாருக்கு பாத்தியப்பட்டது. வா.த.சா.ஆ-2ன்படி முழு சொத்தும் எனது அண்ணன் குப்புராஜிக்கு எனது தாயார் தான செட்டில்மெண்டு மூலம் எழுதிவைத்துள்ளார் என்றால் சரியல்ல. அது போலியாக தயாரிக்கப்பட்ட ஆவணம். எனது அண்ணன் இறப்பதற்கு முன்பு சுய நினைவுடன் அவருடைய பாக சொத்தை எனது மகள் நாகலட்சுமி 1ம் வாதி பெயரில் ஒரு உயில் எழுதி வைத்தார். அவர் இறந்தபிறகு மேற்படி உயில் நடைமுறைக்கு வந்தது. அதன் அடிப்படையில் எனது மகள் மற்றும் எனக்கு சேர்ந்து

மூன்றில் ஒரு பாகம் எங்களுக்கு பாத்தியப்பட்டதாகும். எனது இளைய சகோதரனுக்கு ஒரு பாகம் உண்டு. மேறப்டி உயிலை நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

4. எனது அண்ணன் இறந்து ஒரு வருட காலம் கழித்து பிரதிவாதிகள் அடியாட்களுடன் வந்து என்னை தாக்கனார்கள். என் அண்ணன் இறந்து மூன்று மாதம் கழித்துதான் மேற்படி உயிலை பீரோவில் வைத்து பார்த்தோம். நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் மேற்படி உயிலை பற்றி நான் எதுவும் சொல்லவில்லை. அந்த சமயத்தில் உண்மையில் அதுபோல உயில் எதுவும் இல்லாததாலும், வழக்கிற்காக பின்னிட்டு ஒரு உயிலை போலியாக நான் தயார் செய்தேன் என்றாலும் சரியல்ல. அதனால்தான் மேற்படி உயிலை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

5. வழக்கு சொத்து மீது யாருக்கு பாத்தியம் என்ற விளம்புகை பரிகாரம் எதுவும் கேட்காமல் உறுத்துக்கட்டளை தீர்வு மட்டுமே கேட்டுள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடியாக வேண்டும் மற்றும் நிலைக்கத்தக்கதல்ல. வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.